# மலர் மொத்த வியாபாரி - ஒரு வெற்றிக் கதை:

திரு.முகம்மது சலீம், மலர் வியாபாரி,
பன்னீர் செல்வம் மலர் சந்தை,
கோயமுத்தூர்.
அலைபேசி: 9443734630.



---

## முன்னுரை:

எனது பெயர் முகம்மது சலீம். எனக்கு 35 வயதாகிறது. நான் கடந்த 10 வருடங்களாக கோயமுத்தூரில் உள்ள பன்னீர் மலர் சந்தையில் பூ வியாபாரம் செய்து வருகின்றேன். என்னிடம் பல சிறிய, பெரிய வியாபாரிகள் பூக்களை வாங்கி அவர்களுக்குத் தகுந்த இடத்தில் வைத்து விற்பனை செய்து பயனடைந்து வருகின்றனர்.

நான் எனக்கு அறிமுகமான இடங்கள், விவசாயிகள் மற்றும் பிற சந்தைகளிலும் பூக்களை வாங்கவும் விற்கவும் செய்து வந்தேன். திருவிழாக் காலங்களிலும், விசேஷ நாட்களிலும் சில கூடுதலான ஆடர்களைப் பெற்று அதற்குரிய தேவையான வசதிகளைச் செய்து நுகர்வோரிடம் சரியான நேரத்துக்குக் கொடுத்து வந்தேன். பிற சந்தை நிலவரங்கள் அறிய முடியாத காரணத்தால் எனக்கு பல நேரங்களில் பெருத்த நஷ்டம் கூட ஏற்பட்டுள்ளது.

## தினசரி சந்தை நிலவரம் பற்றி:

ஆனால், இப்பொழுது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம் (C-DAC) இணைந்து எங்களுக்கு indg என்ற இணையதளம் மூலம் சரியான விலையை அறிந்து கொள்ள உதவுகிறது. இதன் மூலம் எங்களுக்கு கோயமுத்தூர் உட்பட 13 சந்தை நிலவரங்களின் பூ விலையை அறியமுடிகிறது. அதனால் திருவிழாக் காலங்களிலும், மற்ற நேரங்களிலும் அறிமுகமான நபர்களிடம் மட்டும் இல்லாமல் மற்ற ஊர்களின் சந்தைகளிலும் வாங்கி என்னால் விற்பனை செய்ய முடிகிறது.

தினசரி சந்தை நிலவரத்தின் மூலம் எனக்கு பயன் கிடைக்கக் கூடிய நபர்களை அணுகி பூ விற்பனை செய்ய முடிகிறது. இதனால் எனக்கு மேலும் போக்குவரத்து செலவுகள் குறைவதோடு சரியான நேரத்திற்கும் என்னால் நுகர்வோருக்கு வழங்க முடிகிறது.

**தினசரி சந்தை நிலவரத்தினால் ஏற்படும் நன்மைகள்:**

வீட்டில் இருந்த படியே எனக்கு 13 சந்தை நிலவரங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. இடைத்தரகர்கள் குறுக்கீடு இல்லாமல் நல்ல லாபத்துடன் பயனடைய முடிகிறது. சந்தை ஆய்வாளர்கள் தினமும் நேரடியாக ஆய்வு செய்து நிலவரங்களை வழங்குவதால் எங்களுக்கு சரியான விலையை அறிய முடிகிறது. மொத்த வியாபாரிகள் பற்றி விபரங்களினால் தகவல் தொடர்பிற்கும் தினசரி சந்தை நிலவரங்களின் மூலம் போக்குவரத்து வசதிகளுக்கும் உதவியாக உள்ளது. பெரிய வியாபாரிகளும் கூட பயனடைந்து வருகின்றனர். மேலும் இதனால் எங்களுக்கு நுகர்வோருக்கு தாமதமில்லாமல் சரியான நேரத்திற்கு பூக்களை அனுப்பி வைக்க முடிகிறது. மேலும் இந்த நிலவரங்களின் உதவியால் வியாபார உலகம் இன்னும் விரிவடைவதோடு அனைத்துத் தரப்பினரின் மனதிலும் ஒரு வெற்றி தளமாக உருவெடுத்துள்ளது.

சுருங்கக் கூறினால் இந்த நிலவரங்கள் எனக்கு மட்டுமல்லாது விவசாய வர்கத்தினருக்கும் பெரிய உதவியாக உள்ளது. நானும் இதை விவசாயிகளோடு பகிர்ந்து கொள்வதால் இரு தரப்பினருக்கும் நல்ல பயனடைய வாய்ப்பாக உள்ளது.

என் நெஞ்சார்ந்த நன்றியை வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும், உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையத்திற்கும் (C-DAC) தினசரி நிலவரத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.